பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

23 04 2025 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. நாட்டின் பாரம்பரியம் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க நினைவகங்களை பராமரிப்பதில், தொல்லியல் துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

3. இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது.

4. மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறையின் கண்காணிப்புக்குழு திட்டங்களின் செயலாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்காக தமிழகம் வந்துள்ளது.

5. ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Rudraksh Singh Khaidem** உட்பட ஆறுபேர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<>>>>>>

பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு கூட்டம் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் புதுதில்லியில் நடைபெற்றது.

மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜித் தோவல் மற்றும் உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவம் குறித்தும், இதுதொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்றார்.

தாக்குதல் நடத்தியவர்கள் மட்டுமின்றி, அதற்கு பின்னணியில் இருந்தவர்களும் அதற்கான விளைவினை சந்திப்பார்கள் என்றும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த நாட்டின் விருப்பமாகும் என்றும் அவர் கூறினார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூன்று தீவிரவாதிகளின் வரைபடங்களை காவல்துறை வெளியிட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து தேசிய புலனாய்வு அமைப்பு விசாரணை மேற்கொண்டு வருகிறது.

காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வர்த்தக நிறுவனங்கள் இன்று மூடப்பட்டிருந்தன.

தெருக்கள் மற்றும் சாலைகள் மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தனியார் பள்ளிகள் இன்று இயங்கவில்லை என்று அவர் மேலும் கூறுகிறார்.

காஷ்மீர் பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் இன்று நடைபெறுவதாக இருந்த தேர்வுகளும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்த தாக்குதல் சம்பவம் காரணமாக ஏராளமான சுற்றுலாப்பயணிகள் தங்களது ஊர்களுக்கு திரும்புவதற்காக ஸ்ரீநகர் விமான நிலையத்தில் காத்திருக்கின்றனர்.

அவர்களுக்க சிவில் விமான போக்குவரத்துத்துறை சார்பில் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே, இந்த தாக்குதல் சம்பவம் குறித்து விவாதிப்பதற்காக அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு நாளை ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

<<<<<>>>>>

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு மத்திய அரசு உரிய பதிலடி கொடுக்கும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்தை ஒடுக்குவதற்காக மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததை சுட்டிக்காட்டினார்.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீரின் சுற்றுலாத்துறை கடந்த ஐந்தாண்டுகளில் பெரும் வளர்ச்சி கண்டதாகவும், இதனை பொறுத்துக்கொள்ள முடியாமல் தீவிரவாதிகள் கோழைத்தனமாக இந்த தாக்குதல் சம்பவத்தை நடத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த தாக்குதல் சம்பவத்தில் கர்நாடகாவை சேர்ந்த 3 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பு அதிகரித்து வருவதாக மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார். இன்று புதுதில்லியில் மத்திய தொல்பொருள் ஆலோசனை வாரியத்தின் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார். நாட்டின் பாரம்பரியம் மற்றும் வரலாற்று சிறப்புமிக்க நினைவகங்களை பராமரிப்பதில், தொல்லியல் துறை முக்கிய பங்கு வகிப்பதாக அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

இந்தியா விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டு வருவதாக சர்வதேச செலாவணி நிதியம் கூறியுள்ளது. அடுத்த இரண்டாண்டுகளுக்கு இது தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி இரண்டு சதவீதமாக இருக்கும் என்றும், அடுத்த ஆண்டில் இது ஆறு புள்ளி மூன்று சதவீதமாக உயரும் என்றும் செலாவணி நிதியத்தின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டிசம்பர் மாதம் இரண்டாம் தேதி தொடங்கி, நான்காம் தேதிவரை இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக கூறினார்.

பாரம்பரிய மருத்துவத்தில் இந்தியாவின் தலைமைத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாகவும் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாமை தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார். பீகாரில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அம்மாநிலத்தை சேர்ந்த அலுவலர்களுக்கென இப்பயிற்சியில் ஒருநாள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது. மேற்குவங்கம் மற்றும் தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அலுவலர்களை தயார்படுத்துவதற்கும் இந்த பயிற்சி முகாம் உதவிடும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

மத்திய கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறையின் கண்காணிப்புக்குழு தமிழகம் வந்துள்ளது.

புள்ளியியல் இயக்குனர் திரு வி பி சிங் தலைமையிலான இந்தக்குழு, சென்னையில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டது.

நாளை தொடங்கி, அடுத்த நான்கு நாட்களுக்கு இந்தக்குழு ஆய்வினை மேற்கொள்ள உள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோவை, கிருஷ்ணகிரி, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

கொல்கத்தா உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதி திரு சுபேந்து சமந்தா, நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் செய்திச்சுடர் நிகழ்ச்சியில், இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரனுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்றிரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**<<<<<>>>>>>**

துருக்கியில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. அது ரிக்டர் அளவில் 6 புள்ளி இரண்டாக பதிவானது.

**<<<<<>>>>>>**

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Rudraksh Singh Khaidem** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 46 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கிர்கிஸ்தானின் **Aidar Musaev**-ஐ வென்றார்.

37 கிலோ எடைப்பிரிவில் **Harshil-**லும், 49 கிலோ எடைப்பிரிவில் **Sanchit Jayani** -யும், 35 கிலோ எடைப்பிரிவில் **Sanskar Vinod Astram** –மும் 40 கிலோ எடைப்பிரிவில் **Prikshit Balahra**-வும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் 43 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் **Milky Meinam**–மும், கஜகஸ்தானின் **Yeldana Abdigani**-ஐ வென்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

-------------

ஃபெடரேசன் கோப்பைக்கான தேசிய தடகள சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் வித்யா ராம்ராஜ் தங்கப்பதக்கம் வென்றார். கொச்சியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் அவர் தங்கப்பதக்கத்தையும், அஷ்வினி வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

-----------

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் கிராண்ட் பிரி செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில், இந்தியாவின் **Koneru Humpy** ஆறு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

----------------

ஹாங்காங்கில் நடைபெற்ற சர்வதேச சைக்கிளிங் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-----------

ஆசிய யோகாசன சாம்பியன் போட்டி புதுதில்லியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி நாளை மறுநாள் தொடங்கி, வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

----------------

சர்வதேச டேபிள் டென்னிஸ் தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.

**<<<<<END>>>>>>**